RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2132

OPEN ACCESS

# புறப்பொருள் வெண்பாமாலையில் துறை ஒற்றுமை: மகட்பாற் காஞ்சி

**மு. அரவிந்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா.

# Departmental Unity in Venpamalai: Magadpar Kanchi

**M. Aravind** [a, *]

[a] Department of Tamil, Presidency College (Autonomous), Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: aravind.yuvan001@gmail.com

Received: 30-08-2022
Revised: 18-10-2022
Accepted: 28-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

In the development of objective grammar, the primary thread material is Venpamalai. It is a post-archaeological grammar text written after Tholkkapiyam. Magadpar Kanchi is the special sector in Venpamalai. Following Tholkkapiyam this sector took place in Venpamalai. This article is about the ideals of this sector. This article compares the Nochi and Uzhinnai sector which is next to Kanji's Magadpar sector. These sectors have also been investigated with other departments. In order to know the influencing factors of these three sectors, the backgrounds of the sectors and departments departments are explained separately. Though this article explains about the comparison of these sectors it also traces the growth of these sectors based on the grammatical tradition.

**Keywords:** Magadkodai, Tolkappiyam, Comparison, Grammatical Exposition

## முன்னுரை

ஒப்பியல் ஆய்வு தமிழியல் ஆய்வுச் சூழலில் அதிகம் அணுகப்படாத ஆய்வுத் துறையாக உள்ளது. அது தற்கால ஆய்வுலகில் செல்வாக்குச் செலுத்தும் ஆய்வு முறைமையாக மாறியுள்ளது. குறிப்பாக திணை, துறை பற்றிய ஆய்வுகளில் அதன் தேவை இன்றியமையாதது. திணைகளுக்கிடையேயான உறவுகளும் துறைகளுக்கிடையேயான உறவுகளும் ஆராயப்பட வேண்டியவை. புறப்பொருள் வெண்பாமாலையின் மகட்பாற் காஞ்சித் துறையோடு பொருண்மையளவில் ஒத்துப்போகும் துறைகள் வெவ்வேறு திணைகளில் அதே நூலில் அமைந்துள்ளன. இனி ஒப்பாய்வின் அடிப்படையில் அவை குறித்துக் காணலாம்.

## புறப்பொருள் வெண்பாமாலை

தொல்காப்பியர் கூறும் புறத்திணையியலை மாறுதலுக்கு உட்படுத்தி விரிவாக அமைவதே புறப்பொருள் வெண்பாமாலை. புறத்திணையைத் தனிக் கோட்பாடாக மாற்றி, பாடல்களின் பொருண்மையை மாற்றிக்காட்ட வேண்டியது தேவை என்று கருதியதால் இந்த விரிவாக்கம் ஏற்பட்டிருக்கலாம் (Seenisamy, 2016). தொல்காப்பியத்திற்குப்பின் அகப்பொருள் நூல்கள் பல தோன்றினும், புறப்பொருள் குறித்துத் தோன்றிய தனி நூல் இதுவென்கிறார் மு. அருணாசலம் (Arunachalam, 1976).

இது புறம் என்ற ஓர் இலக்கியக் கோட்பாடு பற்றிய நூலாக உள்ளது. அகம், புறம், புறனாதல் என்ற அமைவாக தொல்காப்பியத்துள் சொல்லப்பட்டுள்ள திணைக் கோட்பாட்டின் ஒரு பகுதி என இதனைக் கொள்ளலாம். புறம் பற்றிய புறப்பொருள் வெண்பாமாலையின் கருத்துக்கள் தொல்காப்பியர்

கூறும் புறம் பற்றிய கருத்துக்களிலிருந்து வேறுபாடுகள் கொண்டதாக உள்ளன. அகம், புறம், புறனாதல் என்ற முக்கூட்டு திணைக் கோட்பாடு என்ற நிலையிலிருந்து விலகி புறம் என்ற தனித்துவமான கோட்பாட்டின் பெயரில் இது அமைகிறது என்கிறார் துரை. சீனிசாமி (Seenisamy, 2016).

## அமைப்பு

தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த புறப்பொருள் வெண்பாமாலையில் திணை வகைகள் பெருகி உள்ளதால் துறைகளிலும் அப்பெருக்கம் காணப்படுகிறது. தொல்காப்பியர் திணைக்குரிய விளக்கத்தை முதலில் கூறுவார். அதன் பின்னர் துறைகளைத் தொகுத்துத் தருவார். அப்போக்கு ஐயனாரிதனாரிடம் இல்லை. அவர் முதலில் துறைகளை அடுக்கிக் கூறுகின்றார். பிறகு திணையை விளக்குகின்ற கொளுவையும் எடுத்துக்காட்டு வெண்பாவையும் இடம்பெறச் செய்கின்றார். தொல்காப்பியர் திணை என்று வழங்குவதை ஐயனாரிதனார் படலம் என வழங்குகிறார்.

தொல்காப்பியத்திலுள்ள ஏழு திணைகளுடன் கூடுதலாக ஐந்து சேர்ந்து மொத்தம் பன்னிரண்டு படலங்கள் இதில் அமைந்துள்ளன. பொதுவியல் படலம் என்பதுடன் தொல்காப்பியர் அகத்துள் வைத்துக் கூறிய கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் சேர்த்து மூன்று படலங்கள் புதிய சேர்க்கைகள். வெட்சியிலிருந்து கரந்தை தனிப் படலமாகவும், உழிஞையிலிருந்து நொச்சித் தனிப் படலமாகவும் விரிந்துள்ளன. எனவே மொத்தம் ஐந்து படலங்கள் கூடுதலாக இடம்பெற்றுள்ளன.

## மகட்பாற் காஞ்சித் துறைகள்

இன்று நமக்குக் கிடைக்கப்பெறும் தமிழ் நூல்களில் மூத்ததும் இலக்கணத்தைக் கூறுவதுமான தொல்காப்பியமே முதன்முதலில் மகட்பாற் காஞ்சிக்கான இலக்கணத்தை வரையறுத்துக் கூறுகிறது. ‘மகட்பாற் காஞ்சி’ என்பது தொல்காப்பியக் காஞ்சித் திணையில் இடம்பெறும் ஒரு துறையாகும். தொல்காப்பியர் தனது நூலில் ‘மகட்பாற் காஞ்சி’ என்று துறையைக் குறிக்கவில்லை. அவர் குறிப்பிடுவது ‘மகட்பால்’ என்றேயாகும் (Ilampuranar, 1986). தொல்காப்பியத்தைத் தொடர்ந்து புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய ஐயனாரிதனாரும்கூட ‘மகட்பாற் காஞ்சி’ எனத் தன் நூலில் கூறவில்லை (Swaminathaar, 2001).

தொல்காப்பியத்திற்கு உரைக் கண்ட இளம்பூரணரே ‘மகட்பாற் காஞ்சி’ என்ற சொல்லாடலை முதன்முதலில் கையாளுகிறார் (Ilampuranar, 1969) காஞ்சித் திணையில் அமைந்ததால் மகட்பால் என்பதோடு காஞ்சி சேர்த்து (மகட்பால் + காஞ்சி = மகட்பாற் காஞ்சி) மகட்பாற் காஞ்சி எனக் குறித்திருக்க வேண்டும்.

இளம்பூரணருக்கு காலத்தால் பிந்தைய நச்சினார்க்கினியரும் தனது உரையில் மகட்பாற் காஞ்சி என்று குறிக்கிறார் (Seenisamy, 2016). எனவே தொல்காப்பிய உரையாசிரியர்களைப் பின்பற்றி, பின்னாளில் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை உள்ளிட்ட நூல்களில், அதன் உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் நூற்பாக்களைத் தொகுக்கும்போது ‘மகட்பாற் காஞ்சி’ எனத் துறையைக் குறித்தனர் என்று கொள்ள வேண்டும்.

எதிரெதிர் நிலையில் இருக்கும் இருவேறு அரசர்களுள் ஒருவன், மற்றொரு அரசனிடம் அவனது மகளை மணம் செய்ய வேண்டுவதும், அதற்கு அவ்வரசன் மறுப்பதும் இத்துறையின் பொருண்மையாகும். தொல்காப்பியத்திற்குப் பின்னர் புறப்பொருள் வெண்பாமாலை, இலக்கண விளக்கம் என புறப்பொருள் இலக்கணத்தை விளக்கும் பிற்கால இலக்கண நூல்கள் மகட்பாற் காஞ்சியை விளக்குகின்றன. காலப்போக்கில் மகட்பாற் காஞ்சியானது, தொல்காப்பியர் கூறிய நிலையிலிருந்து மாறி, பல்கிப்பெருகி, திரிந்து காணப்படுவதை அறியமுடிகிறது.

அவ்வாறு மகட்பாற் காஞ்சியின் பொருண்மையைப் பெற்று, புறப்பொருள் வெண்பாமாலையில் காணப்பெறும், வெவ்வேறான பெயர்களைக் கொண்ட துறைகளை இனி வரும் பகுதிகள் ஒப்பீடு செய்கின்றன. தொல்காப்பியத்தை அடியொற்றி அவை யாவும் மகட்பாற் காஞ்சி என்ற பொதுப்பெயரால்

வகைப்படுத்தப்பட்டுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சித்திணை, நொச்சித்திணை, உழிஞைத்திணை, ஆகியனவற்றுள் மகட்பாற் காஞ்சியை ஒத்தத் துறைகள் காணப்பெறுகின்றன. இனி அவற்றை திணையோடு சேர்த்து விரிவாகக் காணலாம்.

## காஞ்சிப் படலம்

தொல்காப்பியர் வாகைத் திணைக்கு அடுத்ததாக ஆறாவதாக வைத்துக் கூறிய காஞ்சித் திணையை, ஐயனாரிதனார் வஞ்சிக்கு அடுத்த நிலையில் நான்காவது படலமாக வைத்துக் கூறுகிறார். தொல்காப்பியர் குறிப்பிடும் காஞ்சித் திணையானது நிலையாமை குறித்த பொருண்மையது. ஆனால் ஐயனாரிதனார் குறிக்கும் காஞ்சியானது வஞ்சி வேந்தனுக்கு எதிரான காவல் போர் பற்றியது. வஞ்சி வேந்தனை எதிர்த்து நிற்றலைக் காஞ்சி எனக் கொண்ட ஐயனாரிதனார், தொல்காப்பியர் காஞ்சித் திணையுள் குறித்த நிலையாமையைப் பொதுவியலில் அடக்கினார் என்கிறார் கு.வெ. பாலசுப்பிரமணியன் (Balasubramaniyan, 2018).

“உலகவாழ்வின் முயற்சிகளில் போர் முயற்சி கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு கொண்டால் அம்முயற்சியில் நிலையாமையே பெரிதாய் அமைந்து உலக வடிவை மடித்துவிடும் என்றும், தமிழ் கற்போர் விரைந்து தெளியவேண்டும் என்பதற்காகவே வஞ்சியின் எதிர்மறை வினைக்குக் ‘காஞ்சி’ என்று பெயர் வைக்கத் துணிந்தார் ஐயனாரிதனார். இக்கருத்தைக் கற்புக் கால்கொள்ளும் முல்லை நிலத்தில் வைத்ததும், மக்கள் உயிர்வாழ முயலும்போதே இவ்வறிவோடு வாழவேண்டும் என்பதற்காகவேயாம். தொல்காப்பியரின் காஞ்சித்திணை, உலகின் முழுமையொழுக்கம் பற்றியது. உலகவொழுக்கம் என்பதனுட் போர் ஒழுக்கமும் அடங்கும். எனினும், ஐயனாரிதனார் காஞ்சித்திணையில் போர் ஒழுக்கத்தையே சிறப்பாகக் குறிக்கவேண்டிக் காஞ்சியைப் போர்முறையாகவே காட்டத் துணிந்தார்” (Sivapathasundaranar, 1972). என நா. சிவபாதசுந்தரனார் எதிரூன்றல் காஞ்சி என்பதை விளக்குகிறார். இதன்வழி புறப்பொருள் வெண்பாமாலை தொல்காப்பியத்திலிருந்து முழுமையாக விலகவில்லை என்று தெரிகிறது.

"வேஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்

காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று"

என்று காஞ்சித் திணையின் இலக்கணம் வகுக்கிறது புறப்பொருள் வெண்பாமாலை. தன் நாட்டைக் கவரப் படையெடுத்து வரும் வஞ்சியரசனைத் தடுக்கப் போருக்குச் செல்லுதல் காஞ்சித் திணை என்று இதற்குப் பொருள் காணலாம் (Swaminathaar, 2001).

"அருவரை பாய்ந்திறுது மென்பார்பண் டின்றிப்

பெருவரைச் சீறூர் கருதிச் - செருவெய்யோன்"

என்ற வெண்பாவைக் காஞ்சித் திணைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிறார் ஐயனாரிதனார். இதன் பொருள் யாதெனில், வீணாகக் கழியும் வீரத்தை மலை ஏறுவதில் காட்டி உயிர்விடத் துணிபவர்கள் காஞ்சி மறவர். அத்தகையோர் தம் நாட்டின் மீது பிறர் படையெடுத்து வருவதைக் கேட்டுப் போருக்குச் செல்லப் பொறுமையாக அணிவகுத்து நிற்றலை விரும்பமாட்டார். உடனே சினந்து சென்று பகைவர் எண்ணத்தைப் பாழாக்குவர். அணிவகுத்து நின்று காலம் தாழ்த்துதல் மறவருக்குரிய பண்பாகாது என்பதாகும் (Swaminathaar, 2001).

“உலகியலில் நேரும் பல வகைத் துன்பங்களையும் எதிர்த்து நிற்றல் காஞ்சி என்னும் இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே எதிரூன்றல் காஞ்சியென்னுங் கொள்கையும் பிற்காலத்து உருப்பெறுவதாயிற்று" எல்லாப் பொருளினுஞ் சிறந்த சிறப்பென்னுஞ் செம்பொருளைப் பெறுதல் வேண்டி, நில்லாத உலகியல்பில் நேரும் பல்வகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றல் காஞ்சித்திணை யாதல்போல, ஒன்றாவுலகத்துயர்ந்த புகழைப்பெற விரும்பிப் பலவகையின்னல்களுக்கிடையே பகைவர் சேனையைத் தடுத்து நிறுத்தலாகிய போர்ச் செயலும்

காஞ்சித்திணையெனவே கொள்ளத்தக்கதாகும்” க. வெள்ளைவாரணன் காஞ்சித் திணையை விளக்கிக் கூறுகிறார் (Vellavarayan, 2017).

காஞ்சி - வஞ்சியின் மற்றொரு பகுதியாக மாறியதே புறப்பொருள் வெண்பாமாலையின் முக்கியக் கூறு என்கிறார் துரை. சீனிச்சாமி (சீனிச்சாமி, 2016). இவ்வாறு வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறுபட்ட இருவேறு போர்ச் செயல்களைப் பண்டை நாளில் கொண்டிருந்தன என்பதனை,

"தென்றிசை யென்றன் வஞ்சியொடு வடதிசை

நின்றெதி ரூன்றிய நீள்பெருங் காஞ்சியும்"

என்று சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் கூற்றாக இளங்கோவடிகள் கூறுவதில் அறியமுடிகிறது. பிங்கல நிகண்டு இதனை ‘வட்கார் எதிரூன்றல் காஞ்சி’ என்று கூறுகிறது. பன்னிரு படலம் ‘வஞ்சியுங் காஞ்சியுங் தம்முள் மாறே’ என்று விளக்குகிறது (Swaminathaar, 2001).

இவ்வாறு மேற்கண்ட செய்திகளைக் காணும்போது புறப்பொருள் வெண்பாமாலையின் காஞ்சிப் படலமானது தொல்காப்பியக் காஞ்சித் திணையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நிலையாமைப் பொருண்மையைக் கூறாமல் காவல் போர் பற்றியதாக அமைந்துள்ளது என்பதனை அறியமுடிகிறது.

## மகட்பாற் காஞ்சி

புறப்பொருள் வெண்பாமாலையின் காஞ்சிப் படலத்துள் இருபத்தொரு துறைகள் இடம்பெற்றுள்ளன. பொதுவியல் படலத்துள் அமைந்துள்ள, காஞ்சிப் பொதுவியற்பால் என்ற பகுதியில் வரும் துறைகளையும் காஞ்சித் திணையோடு சேர்த்துக் கூறுவார் பா. சிவநேசன் (சிவநேசன், 2007). மகட்பாற் காஞ்சியானது காஞ்சிப் படலத்துள் இருபதாவது துறையாக இடம்பெற்றுள்ளது.

"ஏந்திழையாட் டருகென்னும்

வேந்தனொடு வேறுநின்றன்று"

என்று மகட்பாற் காஞ்சியின் இலக்கணம் கூறுகிறார் (Swaminathaar, 2005). அழகிய அணிகலன்களை அணிந்த காஞ்சியரசின் மகளை மணம் முடித்துத் தருக என்று கேட்ட வஞ்சியரசனுடன் காஞ்சியரசன் மாறுபட்டு நிற்பது மகட்பாற் காஞ்சி என்று இதற்குப் பொருள் கூறலாம்.

இங்கு முக்கியமாக நோக்க வேண்டியது யாதெனில் தொல்காப்பியர் மகட்பாற் காஞ்சியில் பெண் கேட்டு வருபவர் வேந்தர் என்றும், பெண் கொடுக்க மறுப்பவர் முதுகுடித் தலைவர் என்றும் குறிப்பிடுகிறார் (Ilampuranar, 1969) ஆனால் ஐயனாரிதனார் பெண் கேட்டு வந்தவரை வஞ்சியரசராகவும் பெண் கொடுக்க மறுப்போரை காஞ்சியரசராகவும் வரையறுக்கிறார் (Swaminathaar, 2005).

தொல்காப்பியர் கூறும் முதுகுடித் தலைவர் என்பதற்கு வணிகர், வேளாளர் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுவதையும் ‘அனைநிலைவகை’ எனக் குறிப்பிட்டுப் பார்ப்பனர், அறிவர், தவம் செய்வோர், பொருநர் போன்ற முதுகுடித் தலைவர் அல்லாத பிறர்க்கும் இத்துறை உரியது என்று கூறுவதையும் இங்கு எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது (Vellavarayan, 2017).

"அளிய கழல்வேந்த ரம்மா வரிவை

எளியளென் றெள்ளி யுரைப்பிற் - குளியாவோ

பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாண்முகத்த

கண்போற் பகழி கடிது"

என்ற வெண்பாவை மகட்பாற் காஞ்சிக்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிறார் ஐயனாரிதனார். காஞ்சி வேந்தனின் மகள் திருமகளை ஒத்த அழகுடையவள். அவளை மிகவும் எளிதில் அடைந்துவிடலாம் என இழிவாகப் பேசினான் வஞ்சிவேந்தன். அக்காஞ்சி வேந்தனின் மகள் பண்ணைப் போன்ற இனிய

சொல்லை உடையவள், பலவாகிய வளையல்களை அணிந்தவள், அவளுடைய ஒளிவீசும் முகத்தில் அம்புகளைப் போன்ற வடிவுடைய கூரிய கண்கள் அமைந்துள்ளன. அவை, தன்னை எளிமையாகக் கருதிய கொடையும் வீரக்கழலும் உடைய வஞ்சியரசனின் மார்பிடத்தில் அவன் விழுமாறு விரைந்து சென்று தைக்கும் என்பது இப்பாடலின் பொருளாகும் (Swaminathaar, 2005).

பெண் கொடுக்க உடன்படாமல் போர் செய்தலை விரும்பியதால் இது மகட்பாற் காஞ்சி ஆயிற்று. தன் மகளைப் பகையரசன் மணமகளாக விரும்பின் அதற்கு மாறாகக் காஞ்சி வேந்தன் போர் செய்து அழிப்பதற்கு அஞ்சமாட்டான் என்பது உறுதி. இதன்வழிக் காஞ்சியரசன் தன் பெண்ணின் மீது பேரன்புடையவன் என்பதும் தன்மான உணர்ச்சியுடையவன் என்பதும் வெளிப்படுகின்றன.

“இங்கு காஞ்சி என்பது நிலையாமைப் பொருளைப் பெறாது காய்கைப் பொருள் பெறுதலைக் குறித்து நிற்கும்” (Sivapathasundaranar, 1972). என்று குறிப்பிடுகிறார் நா. சிவபாதசுந்தரனார். இவ்வாறு தன் மகளை மணம் செய்து கொடுக்கக் கேட்கும் வஞ்சியரசனோடு காஞ்சியரசன் மாறுபட்டு நிற்கும் போர்ச் செய்தியை விளக்குவதே புறப்பொருள் வெண்பாமாலை கூறும் மகட்பாற் காஞ்சி என்பதும், இது நிலையாமையை விளக்கவில்லை என்பதும் இதுவரை கண்ட செய்திகள் வாயிலாகத் தெளிவாகின்றன.

## நொச்சிப் படலம்

ஓர் அரசன் பிறிதோர் அரசனின் கோட்டையைக் கைப்பற்றக் கருதுவான். அதன் காரணமாகப் படையெடுத்துச் சென்று பகைவரின் மதிலை வளைத்துக் கொள்வான். அப்படிச் சுற்றி வளைத்தலே முற்றுகையிடுதலாகும். அவ்வாறு முற்றுகையிடப்பெற்ற அரசன் கோட்டைக்குள் இருந்து தன் மதிலைப் பகையரசன் கைப்பற்றாதவாறு காத்துக் கொள்வான். இது நொச்சி ஒழுக்கமாகும். இவ்ஒழுக்கத்திற்குரியோர் நொச்சி மலர் சூடி போர் புரிவர். இதனை ‘எயில் காத்தல் நொச்சி’ என்று பழம்பாடல் விளக்குகிறது.

“நொசி என்பதே நொச்சியாயிற்று. நொசிவு - வளைதலாம். வளைந்த மதிலைக் கொண்டே கோட்டையகத்துக் கோட்டையரசன் வாளாவிருத்தல், மறத்தின் திருப்ப நிலையாம். வளைந்த மதிலையும் கோட்டையையும் பொருளாகக் கொண்டு போர் செய்யும் பேரொழுக்கமே அத்திருப்பம் என்க” என்று விளக்குகிறார் நா. சிவபாதசுந்தனார் (Sivapathasundaranar, 1972).

புறப்பொருள் வெண்பாமாலையில் நொச்சித் திணையானது, காஞ்சித் திணைக்கு அடுத்ததாக ஐந்தாவதாக அமையப்பெற்றுள்ளது. தொல்காப்பியர் நொச்சியைத் தனித் திணையாகக் கூறவில்லை. அவர் நொச்சியை உழிஞைத் திணையுள் அடக்கிக் கூறுகிறார். ஓர் அரசன் பகையரசனின் கோட்டையைக் கைப்பற்றும் நோக்கோடு, அவனது மதிலைச் சுற்றிவளைத்துத் தாக்குவதை உழிஞை என்கிறார் தொல்காப்பியர். உழிஞையின் செயல்களாக மதிலைச் சுற்றி வளைத்தலும், மதிலைக் கைப்பற்றாதவாறு உள்ளிருந்து காத்தலும் என இரு பிரிவுகள் அதில் கூறப்பெற்றுள்ளன.

“நொச்சி வீரர் செயல் தற்காப்பே ஆதலின் தொல்காப்பியரோ, அவர்க்கு முன்னிருந்தவரோ அதனை ஒரு தனித்திணையாக வகுக்கவில்லை” (Balasubramaniyan, 2018). என்கிறார் கு.வெ. பாலசுப்பிரமணியன். ஐயனாரிதனார் மதிலைச் சுற்றி வளைத்தல் என்பதை உழிஞை என்றும், மதிலைக் கைப்பற்றாதவாறு காத்தல் என்பதை நொச்சி எனவும் தனித்தனித் திணையாகக் கொள்கிறார். அவ்வாறே தொல்காப்பியரைப் பின்பற்றி அவர் திணை அமைத்திருந்தால் உழிஞைக்குப் பின்னர் நொச்சியை அமைத்திருக்க வேண்டும். ஆனால் அவர் நொச்சித் திணையை முதலாவதாகக் கூறுவது நோக்கத்தக்கது.

இதுகுறித்து பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர் தன் கருத்தை முதற்பதிப்பின் முகவுரையில் இவ்வாறு பதிவு செய்கிறார். “உழிஞைப்படலத்தின் பின்னிற்றற்குரிய நொச்சிப்படலம், எல்லாப் பிரதிகளிலும் அதற்கு முன்பே காணப்பட்டமையால், அது அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது”

"ஏப்புழை ஞாயி லேந்துநிலை யரணம்

காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று"

என்று நொச்சித் திணையின் இலக்கணம் கூறுகிறார் (Swaminathaar, 2005) ஐயனாரிதனார். பகைவரால் முற்றுகையிடப்பட்டோர் நொச்சிப் பூவினைச் சூடித் தன் மதிலைக் காப்பது நொச்சித் திணையாகும். அம்பினை ஏவுகின்ற அறைகளையும், எய்து மறையும் முடக்குகளையும் உடையது கோட்டை மதிலாகும். அதனை நொச்சிப்பூவைச் சூடிய மறவர் காத்து நின்றனர். அவர்கள் சூடிக்கொண்ட நொச்சி பூவினைப் புகழ்ந்து கூறியது நொச்சித் திணையாகும். என்று இக்கொளுவிற்கு பொருள் கொள்ளலாம்.

“வன்னிலத்திற்கும் மென்னிலத்திற்கும் அமைந்த வேற்றுமை வாழ்வை நினைவு கூர்வதற்கே மற்றத்திணைகளுக்கு உரிய திணைப்பூக்கள் இருந்தும் அப்பூக்களைப் புகழாது இந்நிலத்தமைந்த பூவினைத் ‘திணைப்பூ’வாகப் புகழப்பட்டதென்க” என்று நொச்சிப்பூ புகழ்ந்தமைக்கான காரணத்தை விளக்குகிறார் (Sivapathasundaranar, 1972).

"ஆடரவம் பூண்டா னழலுணர் சீறிய

கூடரணங் காப்போர் குழாம்புரையைச் - சூடினார்"

எனவரும் வெண்பா நொச்சித் திணைக்கு எடுத்துக்காட்டாக அமையப்பெற்றுள்ளது. ஆடுகின்ற தொழிலைச் செய்வது பாம்பு. அதனைத் தன்னுடைய அணிகலனாக விரும்பி அணிந்தவன் சிவபெருமான். அப்பெருமான் முன்னொரு காலத்தில் அசைந்து திரிகின்ற மூன்று மதில்களை அழிப்பதற்காகக் கண்களில் தீ எழச் சினந்து சென்றான். அதனைத் தடுப்பதற்காக அவுணர் கூட்டத்தினர் ஒருங்கே கூடி நின்றனர். அத்தகைய அவுணரைப் போலக் கூரிய வேற்படையை உடைய மறவர், நொச்சிப் பூவினைச் சூடித் திங்கள் தவழ்ந்து செல்லும்படியாக உயர்ந்து நிற்கின்ற மதிலாகிய தங்கள் அரணினைக் காவல் செய்தனர். என இதன் பொருளைத் தெளியலாம். திரிபுரத்தைக் காக்க அவுணர் முயன்றது போல நொச்சியார் தம் அரணத்தைக் காத்தனர். என்பது இதன் மையக்கருத்தாகும். இப்பாடலில் முற்றுகையிடுவோர் சிவபெருமானுக்கும், எதிர்த்து நிற்கும் நொச்சியார் அவுணர் கூட்டத்திற்கும் ஒப்புமையாக்கப்பட்டனர் (Swaminathaar, 2005).

## மகள் மறுத்து மொழிதல்

நொச்சித் திணையிலுள்ள மொத்த துறைகளின் எண்ணிக்கை எட்டாகும். அவற்றுள் இறுதியாக அமைந்தது ‘மகள் மறுத்து மொழிதல்’. தன் மகளை வேண்டும் பகையரசனுக்கு, நொச்சி வேந்தன் பெண் கொடுக்க மறுப்பது மகள் மறுத்து மொழிதல் என்னும் துறையாகும். அதன் இலக்கணத்தை பின்வருமாறு கூறுகிறார் ஐயனாரிதனார்.

"வெம்முரணான் மகள் வேண்ட

அம்மதிலோன் மறுத்துரைத்தன்று"

கொடிய பகையினையுடையவன் உழிஞையரசன். அவன் நொச்சி வேந்தனின் மகளைத் தனக்கு மணம் செய்து தரும்படி கேட்டுக்கொண்டான். அழகிய மதிலகத்து உள்ள நொச்சியரசன், உழிஞையரசனின் அவ்விருப்பத்தை மறுத்துக் கூறுகிறான் என இக்கொளுவிற்கு பொருள் கொள்ளலாம் (Swaminathaar, 2005).

இதற்கு முன்னர் கண்ட மகட்பாற் காஞ்சியில், பெண் கேட்போர் வஞ்சியாராகவும், பெண் கொடுக்க மறுப்போர் காஞ்சியாராகவும் இருப்பதைப் போன்றே இத்துறையும், பெண் கேட்பவன் உழிஞையரசனாகவும், பெண் கொடுக்க மறுப்பவன் நொச்சியரசனாகவும் உள்ளது நோக்கத்தக்கது.

"ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட்

கள்வார் நறுங்கோதை காரணமாக் - கொள்வான்

மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்

கருங்கண்ணி வெண்கட்டிற் கால்"

என்ற வெண்பா மகள் மறுத்து மொழிதல் துறைக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பெற்றது. தேன் ஒழுகும் அழகிய நறுமணமிக்க மலர்களால் ஆகிய மாலையினை அணிந்தவள் நொச்சி வேந்தனின் மகளாவாள். அவள் அழகிய இடையினை உடையவள். அத்தகைய அழகியை அடைய வேண்டும் எனக் கடந்த காலத்தில் பலர் யானையைக் கொண்ட பெரிய படையை நடத்தி வந்தனர். அவர்களை நொச்சி மறவர் வாள்வீசிக் கொன்றனர். அவ்வாறு அழிந்துபட்ட அரசர்களுடைய யானைகளின் கொம்புகளே, நொச்சி வேந்தனின் கரிய கண்களையுடைய மகள் படுத்து உறங்கும் வெண்மையான கட்டிலின் கால்கள் ஆகும். என இவ்வெண்பாவிற்கு பொருள் அமைகிறது (Swaminathaar, 2005).

இவ்வெண்பாவிற்கான பொருளை விளக்குமிடத்து உ.வே. சாமிநாதையர் பின்வருமாறு குறிப்பிடுகிறார் (Swaminathaar, 2005). "ஆயிரு திணையு மரசர்க்குரிய என்பதனால் மகட்பாற்காஞ்சி அரசர்க்குரித்து இது மறவர்க்குரித்து" இதில் 'ஆயிரு திணையு மரசர்க்குரிய' என்பது இடம் விளங்கா மேற்கோளாக உள்ளது. எனவே அதற்குரிய பொருள் சரியாக விளங்கவில்லை. மேற்கொண்டு வருமிடத்து மகட்பாற் காஞ்சி அரசர்களுக்குரியதாகவும், மகள் மறுத்து மொழிதல் மறவர்களுக்குரியதாகவும் அவர் கூறுகிறார். இச்செய்தியை நா. சிவபாதசுந்தரனார் விரிவாக விளக்குகிறார். அதனை இங்கே காண்போம்.

"இம்மொழிதலை நொச்சி மறவர் உழிஞைமறவர்க்குக் கூறியதாக ஐயனாரிதனார் காட்டினார். இது மறவர் கூற்றுக்குரியது. எனவே 'மகட்பாற்காஞ்சி' கண்டோர் கூற்றுக்குரியதாகும். இஃது அரசர்க்கு உரியதாகக் கொள்ளும்போது மேற்செலவு என்று குறிக்கும் வஞ்சித்திணையானது பெண்ணசையின் பொருட்டு அமைந்ததாகக் கொள்ள வேண்டும்" (Sivapathasundaranar, 1972).

மேற்கண்ட செய்திகளின்வழி காணும்போது, மகள் மறுத்து மொழிதலானது நேரடியாக மகட்பாற் காஞ்சியை ஒத்துள்ளது. இவ்விரு துறைகளின் பொருண்மையும் ஒன்றேயாகும். நா. சிவபாதசுந்தரனார் மகள் மறுத்து மொழிதல் துறையை விளக்குமிடத்து, புறநானூற்றில் மகட்பாற் காஞ்சித் துறையில் அமைந்த, காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடிய 353 ஆம் பாடலை சான்று காட்டுவதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும் (Sivapathasundaranar, 1972).

காஞ்சித் திணையில் அமையப்பெறாமல் நொச்சித்திணையில் அமைந்தது மட்டுமே மகள் மறுத்து மொழிதலுக்கான வேறுபாடென்று சுட்டத்தக்கது. எனவே இத்துறையை தொல்காப்பிய மரபையொட்டியதாகவும், தொல்காப்பியத்திற்குப் பிறகான விரிவாகவும் கருத வேண்டியுள்ளது.

## உழிஞைப் படலம்

புறப்பொருள் வெண்பாமாலையில் நொச்சிக்கு அடுத்ததாக ஆறாவது திணையாக அமைவது உழிஞை. இது நொச்சிக்கு எதிரான போர்முறையைக் கொண்டதாகும். நொச்சி மன்னனின் கோட்டையைக் கவரக் கருதும் உழிஞை அரசன் அதை முற்றுகையிடுதலே உழிஞையின் ஒழுக்கம். இதனை ஐயனாரிதனார் பின்வருமாறு விளக்குகிறார்.

"முடிமிசை யுழிஞை சூடி யொன்னார்

கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று"

ஓர் அரசன் பகைவர் நாட்டின் காவற்காட்டையும் அகழியையும் அழித்து பகைவரின் கொடி அசையும் அரணினைக் கைப்பற்றக் கருதுவான். அதற்காக தன்னுடைய முடியின்மேல் உழிஞை மாலையைச் சூடிச் செல்வான். என இக்கொளு உழிஞை ஒழுக்கத்தைக் கூறுகிறது.

"ஐயனாரிதனார் உழிஞைத்திணையிலே கருப்பொருளும் உரிப்பொருளும் அமையும்படியாக முறையே 'முடிமிசை உழிஞை சூடி' என்றும், 'ஆரெயில் கொளக் கருதின்று' என்றும் கூறியுள்ளார்" எனக் கொளு விளக்கப்பட்ட முறைமையைக் கூறுகிறார் (Swaminathaar, 2005).

"உழிஞை முடிபுனைந் தொன்னாப்போர் மன்னர்

விழுமதில் வெல்களிறு பாயக் - கழி மகிழ்"

என வருவது உழிஞைத் திணையின் விளக்கத்திற்குக் கூறப்பெற்ற வெண்பா. ஒழுங்கு செய்யப்பட்ட மலர் மாலையை அணிந்த அழகிய மார்பினை உடையவன் எம்முடைய அரசன். அவன் தனது தலையிலே உழிஞைப்பூ மாலையை அணிந்தான். தன்னோடு பொருந்தாதவராய்ப் போர் செய்யும் பகையரசனின் மதிலிடத்துச் சென்றான். வெல்லும் இயல்புடைய எம் யானைப் படைகள் அப்பகையரசனின் மதிலினை உடைத்து எறிந்தன. அதனால் எளிதில் களிப்படையாத சான்றோரும் களிப்படைத்தனர். அவர்களால் போற்றப்படுகின்ற பெரும்புகழினை எம் அரசன் அடைந்தான் என்பது இதன் பொருள் (Swaminathaar, 2005).

## மகட்பால் இகல்

'மகட்பால் இகல்' உழிஞைத் திணையுள் இருபத்தைந்தாவது துறையாக அமைகிறது. "மகட்பால் இகல்புரிய முனையும் வேந்தன் வாள் மண்ணுதல், மண்ணுமங்கலம் என்பன முதற்கண்புரிதல் போர்த்துறை இயல்பாதலின் இத்துறைக்குமுன் அவைகளை வைத்துக் கூறியுள்ளார் என்பதும் ஈண்டு நாம் சிந்தித்தல் நலம்" (Sivapathasundaranar, 1972) என்று விளக்குகிறார் நா. சிவபாதசுந்தரனார். நொச்சியரசனின் மகளை விரும்பி, உழிஞையரசன் மதிற்புறத்தில் தங்கியிருத்தலே மகட்பால் இகல். இதனைப் பின்வரும் கொளு விளக்குகிறது.

"மயிற்சாயன் மகள்வேண்டிய

கயிற்கழலோ னிலையுரைத்தன்று"

மூட்டுவாயால் சிறந்த வீரக்கழலினை உடையவன் உழிஞைவேந்தன். அவன் மயில் போன்ற சாயலினை உடைய நொச்சியாரின் மகளை மணம் செய்ய விரும்பினான். அந்நிலையை இக்கொளு உரைக்கின்றது (Swaminathaar, 2005).

நொச்சியரசனின் மகளை மணம்புரிய விரும்பிய உழிரையரசனின் செயலை முரண் எனக் குறிக்கும் நா. சிவபாதசுந்தரனார், 'மகட்பால் இகல்' என்பதில் இகல் என்னும் சொல் புலவி என்ற பொருளைத் தருவதாக அவர் குறிப்பிடுவது புதுமையானதாக உள்ளது. இகல் என்பது போரைக் குறிக்கும் என்பதையும் அவர் மறுக்கவில்லை. பொருள் நோக்கிலன்றி இன்பநோக்கில் உழிஞைத்திணை பரவியிருந்ததற்குச் சான்றாக உள்ளது இத்துறை என்று அவர் சான்று பகர்கிறார் (Sivapathasundaranar, 1972).

"அந்தழை யல்குலு மாடமை மென்றோளும்

பைந்தளிர் மேனியும் பாராட்டித் - தந்தை

புறமதில் வைகும் புலம்பே தருமே

மறமதின் மன்னன் மகள்"

என்ற வெண்பா மகட்பால் இகல் துறையை விளக்குகிறது. மறமாண்பினால் சிறந்து விளங்கும் மதிலையுடையவன் நொச்சி வேந்தன். அவனுடைய மகள் அழகிய தழையாடை அணிந்த இடையினை உடையவள். அசைகின்ற மூங்கில் போன்ற தோளினைக் கொண்டவள். பசுமையான தளிற்போன்ற மேனியைப் பெற்றவள். இவ்வாறு அப்பெண்ணின் அழகைக் காதல் வயப்பட்டுப் பாராட்டினான் உழிஞையரசன். அவளை அடைய வேண்டும் என்பதற்காக மதிற்புறத்தே தங்கியிருந்தான். அவ்வேந்தனைத் தனிமைத் துயர் வருத்தியது (Swaminathaar, 2001).

போரில் வெற்றிகண்ட உழிஞை வேந்தன் அழகுநலம் பொருந்திய நொச்சி வேந்தனின் மகள் மீது ஒருதலைக் காதல் கொண்டான். அதன் காரணமாக அவளுடைய தோற்றப் பொலிவினைச் சிறப்புறப் பேசி அவளை அடைய ஆவல் கொண்டு மதிற்புறத்தே தங்கினான்.

மகள் மறுத்து மொழிதல் என்பது, உழிஞை வேந்தன் நொச்சி வேந்தனிடம் மகளை மணம் செய்யக் கேட்பதும், அதற்கு நொச்சி வேந்தன் மறுப்பதும் அகும். மகட்பால் இகல் என்பது உழிஞை வேந்தன் நொச்சியரசனின் மகளை மணம் செய்ய விரும்பி, அவனது மதிற்புறத்தில் தங்குவதாகும். இவ்விரு துறைகளிலும் மகளை மணம் செய்யக் கேட்போர் உழிஞையாராகவும், மறுப்போர் நொச்சியாராகவும் உள்ளனர் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

பொருண்மையளவில் நேரடியாகவே இத்துறை மகட்பாற் காஞ்சித் துறையை ஒத்து கணைப்படுகிறது. திணை மாறி அமைந்தது மட்டுமே தொல்காப்பியத்திற்குப் பிறகான விரிவில் புதிய சேர்க்கை என்று கருதவேண்டும். மேலும் இத்துறையை விளக்குமிடத்து நா. சிவபாதசுந்தரனார், பரணர் பாடிய புறநானூற்றின் 341 ஆம் பாடலை சான்று காட்டுகிறார். இப்பாடல் மகட்பாற் காஞ்சித் துறையில் அமைந்தது என்பது இங்கு நோக்கத்தக்கது (Sivapathasundaranar, 1972). ஆகவே இதுவரை கண்ட தரவுகளின்படி மகட்பால் இகல் என்னும் துறையானது மகட்பாற் காஞ்சித் துறையோடு ஒத்தது என்று அறியமுடிகிறது.

## முடிவுரை

தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய இலக்கண நூல்கள் யாவும் அதனைப் பின்பற்றியும் அதிலிருந்து மாறுபட்டும் இலக்கணம் இயற்றின. புறப்பொருள் வெண்பாமாலையில் அமையும் மகட்பாற் காஞ்சியை தொல்காப்பியத்தின் தொடர்ச்சியாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. ஐயனாரிதனார் தொல்காப்பியர் குறிப்பிடும் ஏழு புறத்திணைகளை விரிவாக்கி பன்னிரண்டாக குறிக்கிறார். இந்த திணை விரிவாக்கம் துறைகளிலும் வெளிப்படுகிறது. இந்த விரிவாக்க முறைமையை சமூகப் பண்பாட்டு காலநிலை மாற்றத்தின் பின்னணியில் அணுக வேண்டும். இலக்கண வளர்ச்சியின் விளைவாக பெருகிய எல்லாத் திணைகள், துறைகள் போன்றே மகட்பாற் காஞ்சியும் புறப்பொருள் வெண்பாமாலையில் பல்கியுள்ளது. அவ்வாறு அமையும் மகள் மறுத்தல் மற்றும் மகட்பால் இகல் ஆகியன மகட்பாற் காஞ்சித் துறையை ஒத்துள்ளன என்பதை இக்கட்டுரையின் வழியே விளங்கிக்கொள்ள முடிகிறது.

## References

Arunachalam, M. (1976) Tamil Ilakkiya Varalaru, Madurai Kamaraj University, Madurai, India.

Balasubramaniyan, K.V. (2018) Sanga Ilakkiyathil Puramporul, Meiyappan Pathippagam, Chennai, India.

Ganasaiyar, (2007) Tholkappiyam, Chennai, India.

Ilampuranar, (1986) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Seenisamy, Durai, (2016) Thinaikotpadu, New Century Book House, Chennai, India.

Sivanesan, (2007) Tholkappiyam, Seethai Pathippagam, Chennai, India.

Sivapathasundaranar, N. (1972) Puramporul Venpamalai, Vattukottai tamil sangam, Chennai, India.

Swaminathaar, (2001) Silapathiagaram, Manivasagam Pathipagam, Chennai, India.

Swaminathaar, (2005) Puramporul, Manivasagam Pathipagam, Chennai, India.

Vellavarayan, K. (2017) Tamil Ilakkiya Varalaru, Pomphukar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License